BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரமானது முதலீடு செய்வதற்கான மிகச்சிறந்த அமைவிடங்களில் ஒன்று என ப்ராம்ப்ட்டன் சைட் செலெக்ஷன் சஞ்சிகை (Site Selection Magazine) அங்கீகரித்துள்ளது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 3, 2021) – நேற்றைய தினம், பெருநிறுவன நிலபுலன் வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கி, சர்வதேச அளவில் வெளியிடப்பட்ட வணிக வெளியீடாகிய சைட் செலெக்ஷன் சஞ்சிகையானது (Site Selection Magazine), கனடாவின் சிறந்த இடங்களின் பட்டியலை அறிவித்தது, அதில் ப்ராம்ப்டன் நகரம் முதல் 20 இடங்களில் இடம் பிடித்துள்ளது.

இந்தத் தரவரிசைப்படுத்தியதன் மூலம், நகரத்தின் பொருளாதார மேம்பாட்டு அலுவலகம் (Economic Development Office) , கனடாவின் சிறந்த முதலீட்டு இடங்களில் ஒன்றாக, சைட் செலெக்ஷன் சஞ்சிகையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய துறைகளான புதுமைபடைத்தல் மற்றும் தொழில்நுட்பம், முன்னோடியான தயாரிப்பு, உணவு மற்றும் பானம் பதப்படுத்துதல் மற்றும் சுகாதாரம் மற்றும் வாழ்க்கை அறிவியல் ஆகியவற்றில் நகர நிர்வாகம், தனது பொருளாதார மேம்பாட்டு முயற்சிகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 2020 ஆம் ஆண்டில், நகரத்தின் FDI யுக்தியின் ஒரு பகுதியாக, வர்த்தகத்தைத் தக்கவைத்தல் மற்றும் விரிவாக்கத்திற்கு கூடுதல் வலியுறுத்துதல் ஆகியவற்றை வழங்கியது. ஏறக்குறைய 700,000 மக்கள்தொகை கொண்டபடி, ப்ராம்ப்ட்டன் நகரம், கனடாவில் இரண்டாவது வேகமாக வளர்ந்து வரும் நகரமாகும். 320,000 எண்ணிக்கையிலான சராசரி 36 வயது கொண்ட ப்ராம்ப்ட்டனின் இளவயதுடைய, படித்த மற்றும் பல இனம் கொண்ட தொழிலாளர் படையானது, 115 மொழிகளைப் பேசுகின்ற 234 க்கும் மேற்பட்ட கலாச்சாரங்களுக்கு பிரதிநிதித்துவம் செய்கிறது.

முதலீடு என்பது நகரத்தின் பொருளாதார மீட்சிக்கான யுக்திக்கான (Economic Recovery Strategy) முக்கிய எல்லைக்கல்லாகும்; மே, 2020 இல் ப்ராம்ப்ட்டன் நகர சபையால் இது அங்கீகரிக்கப்பட்டது. நகரத்தின் புதுமை படைக்கும் மாவட்டத்தின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சி இந்த யுக்தியின் மற்றொரு முக்கிய பகுதியாகும். பொருளாதார மீட்சிக்கான யுக்தி ப்ராம்ப்ட்டன் பொருளாதாரத்திற்கு எதையும் சமாளிக்க வல்ல மற்றும் போட்டியின் காரணமான பலன்களைக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதுடன் கோவிட் -19 தொற்றுநோயிலிருந்து நகரத்தை இன்னும் முன்னோக்கி கொண்டு செல்லவும் உதவும்.

ப்ராம்ப்ட்டன் நகரம் தன் வசம் குறிப்பித்தக்க முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்த்தபடி இருக்கிறது; இதில் பின்வரும் குறிப்பித்தக்க திட்டப்பணிகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டன:

- **அலெக்ட்ரா**:, ப்ராம்ப்ட்டனில், எண்-200 கென்னடி சாலை தெற்கில் அமைந்துள்ள ஒரு புத்தம் புதிய நிலைத்து நிற்கவல்ல இயக்க-செயல்பாட்டு மையம் அமைப்பதற்கான திட்டத்தை ஜூன் மாதத்தில், அலெக்ட்ரா அறிவித்தது (Alectra announced).

இந்த புதிய இடத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள்ளாக, சில்லறை வணிகம் வகையில் 78 வணிகங்களும், தங்குமிடம் மற்றும் உணவு சேவை வகைகளில் 55 வணிகங்களும் உள்ளன. இப்பகுதியில் 400– அதாவது, தற்போதைய அளவில் இருக்கும் வேலைகளின் எண்ணிக்கையை விட இரண்டரை மடங்கு - ஊழியர்களைக் கொண்டுவருவதன் மூலம், அலெக்ட்ரா, ப்ராம்ப்ட்டனின் சில்லறை மற்றும் உணவு வணிகங்களை, இயக்கசெயல்பாட்டு மையத்தின் அருகாமையில் நிலை நிறுத்த உதவுகிறது, மற்றும் நகரின் உள்ளூர் பொருளாதார மீட்பு மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது.

- **கோக் கனடா பாட்லிங்**: டிசம்பர் 2020 இல், கோக் கனடா பாட்லிங் நிறுவனம் தனது கோக் கனடா பாட்டிலில் அடைக்கும் தொழிலகத்திற்காக $ 12.8 மில்லியன் புதிய முதலீட்டை அறிவித்தது. இந்த முதலீடு நுகர்வோருக்கான புதுமையான தயாரிப்புகளின் தேவையை பூர்த்தி செய்கின்ற உற்பத்தி திறன்களை மாற்ற பயன்படும்.
- **மேப்பிள் லாட்ஜ் ஃபார்ம்ஸ்**: இந்த ஆண்டின் தொடக்கத்தில், மேப்பிள் லாட்ஜ் பண்ணைகள் தங்கள் ப்ராம்ப்ட்டன் ஆலையை 250,000 சதுர அடியில் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும், கூடுதலாக 300 வேலை வாய்ப்புகளை உருவாக்கவிருப்பதாகவும் அறிவித்தனர். மேலும் 100 வேலை வாய்ப்புகளை உருவாக்கி, சிக்கன் வகை சில்லறை விறபனைக்கடைகள் வைக்கும் இடத்திற்கான புதிய திட்டங்களையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

தரவரிசைப்படுத்தியதன் முழு முடிவுகள் மற்றும் மேலும் தகவல்கள் இங்கு உள்ளன

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்டன் வாய்ப்புகளுக்கான நகரமாகும், கனடாவின் புதுமை படைக்கும் முற்றம் மற்றும் போட்டியை எதிர்கொள்ளும் திறமை ஆகியவற்றைக் கொண்ட, உலகளாவிய வணிகங்கள் முதலீடு செய்வதற்கு உகந்த எங்கள் இடத்தை நாங்கள் வழங்குகிறோம். சைட் செலக்ஷன் சஞ்சிகை இதழால் கனடாவின் சிறந்த இருப்பிடங்களில் ஒன்றாக தேர்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்; மேலும் எதிர்காலத்தில் நம்மை உலகத் தரம் வாய்ந்த நகரமாக மாற்றுவது பற்றி மேலும் அறிய தளம் தேர்வு செய்பவர்கள் அனைவரையும் வரவேற்கிறோம்.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"தொற்று பரவலின் விளைவுகளிலிருந்து மீண்டு, முன்னோக்கி நகர்வதற்காக, நாங்கள் மீட்பில் கவனம் செலுத்தும் அதே சமயத்தில், ப்ராம்ப்ட்டனின் பொருளாதாரத்திற்கு, போட்டி எதிர்கொள்வதன் பலன்களையும் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையையும் கொண்டு வருவதில் இந்த முதலீடு முக்கிய பங்கு வகிக்கும். ப்ராம்ப்ட்டன் என்றாலே வியாபாரம் என அர்த்தமாகும், மற்றும் சைட் செலக்ஷன் இதழ் கனடாவின் சிறந்த முதலீடுகளில் ஒன்றாக எங்கள் நகரத்தை அங்கீகரித்ததில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப் பொறுப்பு, பொருளாதார வளர்ச்சி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"முதலீடு என்பது நகரத்தின் பொருளாதார மீட்புக்கான யுக்தியின் ஒரு முக்கிய மூலைக்கல்லாகும், மேலும் கனடாவிலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள வணிகங்களுக்கான ஒரு புதுமை படைக்கும் நகரமாகவும் முதன்மையான முதலீட்டு இடமாகவும் ப்ராம்ப்ட்டன் தன்னை அர்ப்பணித்துள்ளது. சைட் செலக்ஷன் சஞ்சிகை, எங்கள் உலகத் தரம் வாய்ந்த நகரத்தை கனடாவின் சிறந்த இடங்களில் ஒன்றாக அங்கீகரித்ததை நாங்கள் வரவேற்கிறோம். எங்கள் திறமை மிக்க பணியாளர்கள், புதுமை படைக்கும் முற்றத்தில் அமைவிடம் மற்றும் அர்ப்பணிப்பு நிறைந்த பொருளாதார மேம்பாட்டுக்

குழு ஆகியவற்றுடன், எங்கள் சமூகத்தில் முதலீட்டை வரவேற்க ப்ராம்ப்ட்டன் நகரம் தயாராக இருக்கிறது.

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத்தலைமைப் பொறுப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் கலாச்சாரம், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில், எங்கள் கவுன்சில் கால முன்னுரிமை கொண்ட விஷயங்களை ஆதரிக்க நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம்: ப்ராம்ப்ட்டன் வாய்ப்புகளுக்கான நகரம், மேலும் வணிகங்கள் முதலீடு செய்வதற்கான உகந்த இடமாக நாங்கள் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறோம். ப்ராம்ப்ட்டன் பொருளாதார மேம்பாட்டு அலுவலகத்தில் உள்ள எங்கள் குழுவுக்கு கனடாவின் சிறந்த இடங்களில் ஒன்றாக இந்த அங்கீகாரம் கிடைத்ததற்காக, அவர்களுக்கு வாழ்த்துக்கள். கோவிட் -19 தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து நாங்கள் மீண்டு முன்னேறும் அதே சமயத்தில், நாங்கள் எங்கள் நகரத்தை மீட்டெடுப்பதிலும் கவனம் செலுத்துகிறோம், மேலும் தொடர்ந்து முதலீட்டைக் கொண்டு வருவதன் மூலம் நமது பொருளாதாரத்திற்கு வளைந்துகொடுக்கும் தன்மையைக் கொண்டுவருவோம்.

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca